வளன்ஆயம்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# தமிழிலக்கியமும் ஐயனார் தொன்மமும்

**சீ.ரேவதி,**
**முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,**
**தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி,**
**திருச்சிராப்பள்ளி -02.**

ஆய்வுச்சுருக்கம்

தமிழக மக்களின் பண்பாடு அவர்களது வழிபாட்டுணர்வில் மிகுதியாகப் புதைந்து கிடக்கின்றது. நாட்டாரின் உள்ளப்பாங்கையும், நன்றி உணர்வையும் இயற்கையோடு இயைந்த வாழ்க்கைத்தன்மையும் அவர்களது வழிபாட்டு முறைகள் வெளிப்படுத்துகின்றன. அவ்வகையில் ஐயனார் வழிபாடு தமிழகத்தில் இருபது நூற்றாண்டுக் கால பழமையுடையதாகும். தமிழ் இலக்கியத்தின் வழி ஐயனார் தொன்மத்தை ஆய்வதே இக்கட்டுரையின் மையமாக அமைகின்றது.

திறவுச்சொற்கள்

சாஸ்தா, செண்டாயுதன், அறப்பெயர்ச் சாத்தன், புறம்பணையான், பாசண்டடன்

முன்னுரை

மனிதன் தனக்கு மீறிய ஆற்றல் வாய்ந்த சக்தி ஒன்று இருப்பதாகக் கருதுகின்றான். இந்த சக்தியே தன் வாழ்விலும் தன்னையொத்த மாந்தர்கள் வாழ்விலும் ஏற்படும் நன்மை தீமைகளுக்குக் காரணமாக அமைகின்றது என்றும் நம்புகின்றான். தன்னால் இயலாத செயல் முடிவடையும்போது நன்றியோடும்இ துயரங்கள் ஏற்படுகின்றபோது அதிலிருந்து விடுபடுவதற்காகவும் அச்சக்தியினை இறைவன் என்று கருதி வழிபடுகின்றான். இந்த வகையில் நாட்டாரால் ஊர்த் தெய்வமாக வழிபடப்பட்டு வரும் ஐயனார் பற்றியும் அவ்வழிபாடு குறித்த இலக்கியச் செய்திகளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஐயனார் சொற்பொருள் விளக்கம்

தமிழ்நாட்டில் பரவலாக வழிபடப்படும் ஊர்த்தெய்வங்களில் ஐயனார் என்னும் தெய்வமும் ஒன்றாகும். தமிழ்நாட்டில் இத்தெய்வம் பல பெயர்களால் சுட்டப்படுகின்றது. முகவை, விருதுநகர், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் 'ஐயன்','ஐயனார்' என்ற பெயரோடும், நெல்லை, குமரி ஆகிய மாவட்டங்களில் 'சாஸ்தா' என்ற பெயரோடும் இத்தெய்வம் அழைக்கப்படுகின்றது.கேரள மாநிலத்தில் ஐயனார் தெய்வம், 'சாஸ்தா', 'ஐயப்பன்' எனவும் கருநாடகத்தில் 'ஐயப்ப தேவ' எனவும் அழைக்கப்படுகின்றது. ஆனாலும் ஐயனார் என்ற பெயரே பெரும் வழக்காக இன்றளவில் உள்ளது. ஐயன் என்ற சொல்லும், ஐயர் என்ற சொல்லும், ஒருமை பன்மை வேறுபாடுகளோடு ஆண்பாலுக்குரியதாக இலக்கியங்களில் காணப்படுகின்றன. ஐயன் என்ற சொல்லுக்கு "அரசன், அருகன், அழகுடையவன், கடவுள், சாத்தன், தந்தை, மூத்தோன்"1 எனச் சிறப்புப் பெயரகராதிப் பொருள் தருகின்றது. இதில் வரும் ஐயன் என்ற சொல்லோடு, ஆர் என்னும் விகுதி மரியாதைக்குரியதாக இடம் பெற்று (ஐயன் -ஆர்) ஸ்ரீ ஐயனார் என்றாகின்றது.

தமிழில் தொன்மையான நிகண்டு நூல்களான திவாகரமும் பிங்கலமும் ஐயனாரின் பெயர்களைக் கீழ்க்காணுமாறு குறிப்பிடுகின்றன."கோழிக் கொடியோன், சாதவாகனன், காரி, சாத்தன், ஐயன், பூரணை கேள்வன், புட்கலை மணாளன், செண்டாயுதன், அரிகரபுத்திரன்"2எனத் திவாகரமும்,

"சாதவாகனன், கோழிக் கொடியோன், காரி, வெள்ளையானை யூர்தி, செண்டாயுதன், கடனிற வண்ணன், பூரணை கேள்வன், புட்கலை மணாளன், ஆரியன், அறத்தைக் காப்போன், யோகி, அரிகரபுத்திரன்"3 எனப் பிங்கலந்தையும் ஐயனாருக்குரிய பெயர்களைக் குறிப்பிடுகின்றன.

தமிழ்ப் பேரகராதி (லெக்சிகன்) மேற்குறிப்பிட்ட பெயர்களோடு சேவகன், சேவகனார் என்ற பெயர்களையும் சுட்டுகின்றது.

சங்க இலக்கியத்தில் ஐயனார்

கால மாறுபாடுகளோடு வட்டார வேறுபாடுகளோடும் ஐயனாரின் பெயர் காலந்தோறும் வளர்ச்சியடைந்திருக்கின்றது. இப்பெயர் வழக்குகளில் சங்க இலக்கியத்தில் காணப்பெறும் 'காரி' என்ற பெயரே மிகப் பழமையானதாகத் தோன்றுகிறது. சங்க இலக்கியங்களில் ஐயனாருக்கு வழங்கப்பெறும் மற்றொரு பெயர் 'சாத்தன்' என்பதாகும். இப்பெயர் வழக்கு சங்க இலக்கியங்களை விடவும். சங்கப்

புலவர்களின் பெயர்களில் மிகப் பரந்த அளவில் காணப்படுகின்றது. இப்பெயர்கள் வணிகரைக் குறிக்கும் அடிச் சொல்லான 'சாத்து' என்பதிலிருந்து பிறந்ததாகும். சங்க இலக்கியங்களில் ஐந்து இடங்களில் (அகம்.39,167,245,291,குறுந்.390) இச்சொல் காணப்படுகின்றது. இதன் பொருள் 'வணிகக் கூட்டம்' என்பதாகும். இதற்குரிய வேர்ச் சொல்லைத் திராவிட மொழிகள் எவற்றிலும் காணமுடியவில்லை. எனவேஇ இச்சொல் வடமொழி அல்லது பிராகிருதத்தின் வழித் தமிழில் நுழைந்திருக்க வேண்டும் எனக் கருதப்படுகின்றது

சங்க இலக்கியங்களில் காணப்படும் மற்றொரு பெயர் வழக்கு 'அறப்பெயர்ச் சாத்தன்' (புறம். 395) என்பதாகும். இப்பெயர் வழக்கு மிகப் பிற்காலத்தில் காணப்படும் 'தர்ம சாஸ்தா' என்பதன் மூல வடிவமாக இருக்கலாம். இப்பெயர் வழக்கையே பிங்கல நிகண்டு 'அறத்தைக் காப்போன்' எனக் குறிப்பிடுகின்றது.

ஐயனாரைக் குறிக்கும் ஏனைய பெயர்களைக் காலந்தோறும் அத்தெய்வத்தின் வழிபாட்டின் வளர்ச்சியைப் பொருத்துப் பிறந்தவையாகக் கொள்ளலாம். 'காரியூர்தி' என்ற பெயர் கருத்த நிறமுடைய ஐயனாரின் குதிரையைக் குறித்ததாக இருக்க வேண்டும். ஏனெனில் ஐயனாரின் மற்றொரு ஊர்தியான யானையைக் குறிக்கும் 'வெள்ளை யானை யூர்தி' என்ற பெயரும் காணப்படுகிறது. மிகப் பிற்காலப் புராண மரபுகள் இந்திரனின் வாகனமாக 'ஐராவதம்' என்னும் வெள்ளை யானையைக் குறிப்பிடுகின்றன.

காரி என்னும் சொல் பழந்தமிழ்ச் சொல்லாகும். கருத்த நிறத்தைக் குறிக்கும் இச்சொல் ஒரு பறவையின் பெயராகவும், 'காரிக் கண்ணன்' என்று திருமாலின் பெயராகவும் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றது.

ஐயனார் தெய்வத்தைப் பற்றிய குறிப்பு முதன் முதலில் சங்க இலக்கியங்களில் தான் காணப்படுகின்றது. இந்த ஐயனார் சங்க காலத்தில் புகழுக்குரிய தெய்வமாக இருந்தது என்பதைச் சங்க இலக்கியங்களில் காணப்படும் புலவர்களும். அரசர்களும் சாத்தன் என்ற பெயரை மிகுதியாகக் கொண்டிருப்பதனால் அறிய முடிகிறது. ஆடுதுறை மாசாத்தனார் (புறம். 229) ஆலம்பேரி சாத்தனார் (அகம். 47, 81,143, 175, நற்.152, 253, ஆவூர் மூலங்கிழார் மகனார் பெருந்தலைச் சாத்தனார் (அகம். 13, புறம். 151, 164, 165,) உறையூர் கதுவாய் சாத்தனார் (நற். 370), உறையூர் முதுகண்ணன் சாத்தனார் (புறம். 27, 30, 325, கருவூர் கதப்பிள்ளைச் சாத்தனார் (புறம். 168) கூலவாணிகன்

சீத்தலைச் சாத்தனார் (புறம். 59) பெருஞ் சாத்தனார் (புறம். 125), வடம வண்ணக்கன் பேரி சாத்தனார் (புறம். 198), ஒக்கூர் மாசாத்தனார் (அகம். 14, புறம். 245) என்பன அப்பெயர்களாகும். மேற்குறிப்பிட்ட புலவர்களின் பெயர்களின் முன் காணப்படும் ஊர்களைக் கொண்டு தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் சாத்தன் தெய்வத்தின் வழிபாடு சிறப்புடன் இருந்ததை அறிய முடிகிறது.

அறப்பெயர்ச் சாத்தன்

"மகா சாஸ்தா, தர்ம சாஸ்தா என இன்றும் வழங்கப் பெற்று வரும் பெயர்களே சங்க காலத்தில் 'மாசாத்தன்' என்றும் 'அறச்சாத்தன்' என்றும் வழங்கப் பெற்றிருக்க வேண்டும். புறநானூற்றுப் பாடல் ஒன்றில் "அறப்பெயர்ச் சாத்தன்" (புறம். 395) என்ற பெயர் காணப்படுகின்றது. ஐயனாருக்கு 'அறத்தைக் காப்போன்' என்ற பெயரும் இருப்பதை நிகண்டு நூல்கள் குறிப்பிடுகின்றன. இந்த அறப்பெயர்ச் சாத்தனுக்குப் பிடவூரில் கோயில் அமைத்து வழிபட்டிருக்கின்றனர். புலால் உண்ணாமை, பொய் பேசாமை, பிறன் மனை நோக்காமை முதலிய அறச் செயல்களைக் கடைப்பிடிக்குமாறு சமணமும் பௌத்தமும் வலியுறுத்தின. அறத்தால் புகழ் பெற்றவனே அறச்சாத்தன்.நிறுவனச் சமயங்கள் போன்று கடவுட் கோட்பாட்டினைப் பேசாது அறத்தையே முன்னிறுத்தும் சமயங்களாக பௌத்த-சமணத்தைக் காண்கின்றோம். எனவே அறப்பெயர்ச் சாத்தன் என்ற பெயர் வழக்குப் பௌத்த சமண செல்வாக்கில் பிறந்த ஒன்றாக இருக்க வேண்டும். சங்க காலத்தில் பிடவூரில் இருந்த அறச்சாத்தன் பிற்காலத்திலும் புகழுடன் இருந்திருக்கிறது. பிடவூர் இன்று திருச்சி மாவட்டத்தில் திருப்பட்டூர் என அழைக்கப்படுகின்றது. இந்த ஐயனாரைப் பற்றி கி.பி. 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சேக்கிழார் பெரிய புராணத்தில் குறிப்பிட்டுள்ளார். "சேரமான் பெருமாள் நாயனார் இயற்றிய உலா நூலைத் திருக்கைலாயத்தில் சிவபெருமான் முன்னிலையில் அரங்கேற்றினார். இப்பாடலின் சுவையறிந்த சாத்தன் அவற்றைப் பிடவூரில் வெளிப்படுத்துமாறு வேண்டியிருக்கிறார்."4 என பெரிய புராணம் சான்று பகர்கின்றது.

பூதநாதனும் சதுக்கப் பூதமும்

பதிற்றுப்பத்து ஒன்பதாம் பத்தின் பதிகத்தில் கொடிய திரளையுடைய பூதங்களைக் கரூர்ச் சதுக்கத்தில் கொண்டு நிறுத்தியது கூறப்பட்டுள்ளது. சதுக்கம் என்பதற்கு நான்கு தெருக்கள் கூடும் இடம் என்று பொருள். சங்ககாலத்திலேயே கருவூரில்

சதுக்கப் பூதநாதனார் என்ற புலவர் இருந்ததாகக் கூறப்படுகிறது. ஐயனாரின் துதிப்பாடல் கூறும் 108 சரணங்களில் 'பூதநாதன்' என்ற பெயரும் அடங்கும். எனவே பூதநாதனும் சதுக்கப் பூதமும் ஐயனாரின் மாற்று வடிவங்கள் எனக் கொள்ளலாம். பூதங்களின் கணநாதனாகிய மாசாத்தனைச் சைவர்கள் கொண்டிருந்தனர். காஞ்சி புராணம் இந்த மாசாத்தனைப் பற்றி புராணக்கதை படைத்துள்ளது.

"சங்க காலத்தில் ஆந்திர நாட்டிலுள்ள சாத்தனாகிய பூதநாதனைத் தமிழ் நாட்டிற்குக் கொண்டு வந்து வணங்கியதை அறியலாம். இந்தச் சாத்தனை சாதவாகனன் ஆண்ட அமராவதியிலிருந்து சேரன் கொண்டு வந்திருக்கலாம்"5 எனக் கருதுவார் பி.எல். சாமி. இதே கருத்தையே ஆய்வாளர் குளோத்தியும்6 குறிப்பிடுகின்றார்.

சிலம்பும் ஐயனாரும்

சங்க இலக்கியத்திற்கு அடுத்ததாக சிலப்பதிகாரத்தில்தான் ஐயனாரைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. அதோடு ஐயனாருக்குக் கோயில் இருந்ததையும் சிலப்பதிகாரமே முதன் முதலில் குறிப்பிடுகிறது. கனாத்திறம் உரைத்த காதையில்

"வச்சிரக் கோட்டம் புறம்பணையான் வாழ்கோட்டம்
நிக்கந்தக் கோட்ட நிலாக் கோட்டம் புக்கெங்கும்
தேவிர்கா ளெம்முறுநோய் தீர்மென்று மேவியோர்
பாசண்டச் சாத்தற்குப் பாடு கிடந்தாளுக்கு "7

என்ற அடிகள் இடம் பெற்றுள்ளன. இப்பாடலில் சாத்தனைப் பற்றிய இரண்டு குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. அவை

1.புறம்பணையான் 2.பாசண்டன் என்பனவாகும்.

புறம்பணையான் என்ற பெயர் சாதவாகனன் என்ற பெயரைக் குறிப்பதாக வேங்கடசாமி நாட்டார்"8 கருதுகின்றார். புறம்பணையான் என்பது மாசாத்தன் என்றும், 'புறம்பு அணைந்த விடம் புறம்பணையாயிற்று' என்றும் குறிப்பிடுகின்றார். ஐயனாரைப் 'புறத்தவன்' என்ற பெயராலும் அழைத்துள்ளார். எனவேதான் ஊருக்குப் புறம்பாக ஐயனார் கோயில் இருப்பதை இன்றும் நாம் காணமுடிகிறது.

'பாசண்டம்' என்ற சாத்தனைப் பற்றிய குறிப்பும் சிலம்பில் இடம் பெற்றுள்ளது. பாசண்டம் என்பது வடமொழிச் சொல்லாகும். இச்சொல்லிற்கு "தொண்ணூற்றாறு வகைச் சமய சாத்திர தருக்கக் கோவையில் வல்லவர்" என்றும், "கடவுள்" என்றும் பொருள் கூறுகின்றார் வேங்கடசாமி நாட்டார்."9 பௌத்த நூலான வளையாபதியும்

“சாத்தன் தொண்ணூற்றாறு வகைத் தருக்கக் கோவையில் வல்லவர்"10 என்று குறிப்பிடுகிறது. பாசண்டம் என்ற சொல் வைதீகச் சமயமல்லாத பிற சமயங்களானச் சமணம், பௌத்தம் முதலிய சமயங்களை மொத்தமாகக் குறிப்பதற்குப் பயன்பட்டிருக்கிறது. இந்தப் பாசண்டத்தில் உள்ள அடியார்களைப் "பாசாண்டிகள்" எனவும் அழைத்துள்ளனர். எனவே பாசண்டத்தில் பல சமயத் தெய்வங்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் ஒன்று சாத்தன் என்னும் தெய்வமாகும். இந்த பாசண்டச் சாத்தனே மாலதியின் துயர் தீர்த்தவன் எனக் கருதலாம்.

மாலதி மாற்றாள் குழந்தைக்குப் பால் புகட்டும் போதுஇ தொண்டையில் பால் அடைத்துக் குழந்தை இறந்து விடுகிறது. குழந்தையைக் காப்பாற்ற அவள் தெய்வத்திடம் சென்றாள். அங்கு இடாகினிப் பேய் மாலதியை ஏமாற்றிக் குழந்தையை எடுத்துச் செல்கிறது. மாலதி பாசண்டச் சாத்தனிடம் சென்று தவம் கிடக்கின்றாள். இவளின் நிலையை அறிந்த பாசண்டச் சாத்தன் குழந்தை உருவில் வந்து மாலதியின் துயரத்தை நீக்கினான் எனச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. இதன் எச்சமாகவே இன்றும் ஐயனார் வழிபாட்டில்

1.சப்பாணிப் பிள்ளை 2. தவழும் பிள்ளை 3.நடைப் பிள்ளை 4.கும்பிடு பிள்ளை

முதலிய குழந்தைகளை மண் வடிவில் செய்து நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர். இது மாலதியின் துயரத்தைத் தீர்ப்பதற்காக ஐயனாரே குழந்தை உருவத்தில் வந்த சம்பவத்தைக் குறிப்பதன் எச்சமாக இருக்கலாம் எனத் தோன்றுகிறது. குழந்தை இல்லாதவர்களுக்கு ஐயனார் குழந்தை தருவார் குழந்தையாக வருவார் என்று நம்புகின்றனர். குழந்தை இல்லாதவர்கள் குழந்தை செய்து விடுவதாக வேண்டிக் கொண்டு 'பிள்ளை' உருவம் செய்து வைப்பதும் உண்டு. குழந்தைப் பிறந்த பின்பு நேர்த்திக்கடனைச் செலுத்துவதையும் அறிய முடிகின்றது.

செண்டாயுதன்

ஐயனாருக்குரிய பெயராக நிகண்டு நூல்கள் குறிப்பிடும் மற்றொரு பெயர் 'செண்டாயுதன்' ஆகும். இச்செண்டு கேள்விக்குறிபோல் நுனிப் பகுதி வளைந்து காணப்படும் ஒரு கருவியாகும். செண்டாயுதன் என்று நிகண்டு நூல் குறிப்பிட்டாலும் இக்கருவி ஓர் ஆயுதமாகுமா? என்பது விவாதத்திற்குரியதாகும். காஞ்சிபுரம் காமக்கோட்டத்தில் இருக்கும் சாத்தன் கையில் உள்ள செண்டினைப் பெற்றுச் சென்றே கரிகாலன் இமயமலையினை வென்றான் என்று ஒரு தனிப்பாடல் கூறுகின்றது.

"கச்சி வளைக்கைச்சி காமக்கோட் டங்காவில்
மெச்சி யினிதிருக்கு மெய்ச்சாத்தன்
கைச்செண்டு
கம்பக் களிற்றுக் கரிகாற் பெருவளத்தான்
செம்பொற்கிரி திரித்த செண்டு"11 என்பதே அப்பாடலாகும். இப்பாடலில் குறிக்கப்படும் ஐயனார் உருவம் காஞ்சியில் காமாட்சி சன்னிதியின் பின்புறமாக அமைந்துள்ளது.

பூரணை, புட்கலை என்ற இருவரை ஐயனாரின் தேவியராக நிகண்டு நூல்கள் குறிப்பிடுகின்றன. இப்பெயர் வழக்குகள் நிகண்டு நூல்கள் பிறந்த கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும். முகவை மாவட்டத்தில் உள்ள ஐயனார் கோயில்கள் அனைத்திலும் ஐயனார் இரண்டு தேவியருடன் காட்சியளிக்கிறார். இன்றும் இப்பகுதியில் பூரணம் புஷ்பம் என்ற மக்கட் பெயர் வழக்குகள் பரவலாகக் காணப்படுகின்றன.

அரிகரபுத்திரன்

அரிகரபுத்திரன் என்ற பெயரும் ஐயனாரைக் குறிக்கும். அரிக்கும் அரனுக்கும் (திருமால் சிவன்) பிறந்த மகனாக ஐயனாரைப் புராணங்கள் காட்டுகின்றன. இப்பெயரும் இக்கதையும் இதன்அடிப்பிறந்த ஐயப்பன் வழிபாடும். இன்றும் கேரளத்தில் செல்வாக்குடன் உள்ளன.

கோழிக்கொடியோன் என்ற பெயரும் ஐயனாரைக் குறித்து நிற்கிறது. ஐயனாரின் கொடி 'கோழிக்கொடி' எனப் பிங்கல நிகண்டு குறிப்பிடுகின்றது. கோழியைக் குறியீடாகக் கொண்டதனால் 'கோழிக்கொடியோன்' என அழைக்கப் பட்டிருக்கலாம். முருகனின் கொடியும் கோழிக்கொடியாகும். சிவனின் விந்திலிருந்து பிறந்த குழந்தை என இவ்விருவர் பிறப்பும் கூறப்படுகின்றது. இதன் அடிப்படையிலே இருவருக்கும் கோழிக்கொடி கற்பிக்கப்பட்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது.

தொகுப்புரை

சங்க இலக்கிய காலத்தில் ஐயனாரை மக்கள் வழிபட்டிருக்கின்றனர் ஐயன், ஐயனார். சாஸ்தா என மக்கள் இத்தெய்வத்திற்குப் பெயரிட்டு வழங்கினும், நிகண்டு நூல்கள் இவருக்குப் பல பெயர்களைக் குறிப்பிடுகின்றன. அவற்றுள் 'சாத்தன்' என்ற பெயர் குறிப்பிடத்தகுந்த ஒன்றாகும். சாத்தன் என்ற சொல் சங்க இலக்கியத்தில் மிகுதியாகக்

காணப்படுகின்றன. இச் சொல்லிற்கு 'வணிகக் கூட்டம்' என நிகண்டுகள் பொருள் தருவதால் சாத்தன் வணிகர்களின் தெய்வமாக இருந்திருக்கலாம் என அறியமுடிகின்றது.

சங்க இலக்கிய காலத்திற்கு முன்பு ஐயனார் எந்த ஒரு சமயத்தையும் சாராமல் தனித்து வழிபடப்பட்டிருக்கிறது. கி.பி. மூன்றாம் நூற்றாண்டுகளில் குறிப்பேதும் இடம்பெறவில்லை. சிலப்பதிகாரமே ஐயனாருக்குக் கோயில் இருந்ததை முதன் முதலில் சுட்டுகின்றது. தனித்திருந்த ஐயனாருக்கு வைதீக மரபு பிற்காலத்தில் இரண்டு மனைவியரைக் கற்பித்திருப்பதை அறிய முடிகின்றது. தற்காலத்தில் நாட்டார் வழிபாட்டோடு இணைந்து ஒவ்வொரு ஊரிலும் ஊர்க்காவல் தெய்வமாக இடம்பெற்றிருப்பதை அறிய முடிகின்றது.

அடிக்குறிப்புகள்

1. இராமசாமி சு.அ. சிறப்புப் பெயரகராதி, ப. 563
2. சண்முகம்பிள்ளை.மு , சுந்தரமூர்த்தி.இ, (பதிப்பு) திவாகரம், ப. 157
3. பிங்கலந்தை நிகண்டு மூலமும் உரையும், ப. 27
4. பெரிய புராணம், வெள்ளாணைச் சருக்கம், ப. 52.
5. பி.எல்.சாமி, தமிழ் இலக்கியத்தில் தாய்தெய்வ வழிபாடு, ப. 29
6. Fred clothe,Image of man ‘Religion and Historical process in South Asia,P.38
7. சிலப்பதிகாரம், கனாத்திறம் உரைத்த காதை பா.எண்.12-15.
8. வேங்கடசாமி நாட்டார், சிலப்பதிகாரம்,ப.213
9. மேலது,ப.213.
10. . பி.எல்.சாமி, தமிழ் இலக்கியத்தில் தாய்தெய்வ வழிபாடு, ப. 15
11. இராகவையங்கார் (தொகு).பெருந்தொகை பா.எண் 5, 95-98.